Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAYDAY, MAY 09, 2025

வெள்ளிக்கிழமை 09, மே 2025 | ஒளி: 10 கதிர்: 235 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE



## அம்ஷிகா விவகாரம்

# செருப்பால் அடித்து காரி உமிழ்ந்து ஆவேசம்

### சாவுக்கு காரணமான ஆசிரியரை கைது செய்ய வலியுறுத்தல்

பாலியல் வன்புணர்வுக்கு உள்ளானதன் பின்னர், மன உளைச்சலுக்கு உள்ளாகி தன் உயிரை மாய்த்துக் கொண்ட மாணவி டில்ஷி அம்ஷிகாவின் மரணத்திற்கு நீதி கேட்டு, கொழும்பில் இரண்டு ஆர்ப்பாட்டங்கள், வியாழக்கிழமை (08) முன்னெடுக்கப்பட்டன.

கொட்டாஞ்சேனை விவேகானந்தா சந்தியிலும், பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி முன்பாகவும் நடத்தப்பட்ட மக்கள் போராட்டத்தில், பொதுமக்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டு, ஆக்ரோஷமாக குரல் எழுப்பினர்.

கொட்டாஞ்சேனை விவேகானந்த சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை அடுத்து, ஹின்னி அப்புஹாமி மாவத்தையில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு முன்பாகவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், கொட்டாஞ்சேனை கல்பொத்த வீதியில் அமைந்துள்ள மாணவியின் வீட்டுக்கு முன்னால் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள்

தொடர்ச்சி P2







# கரும்புகை கிளம்பியது

சிஸ்டைன் சேப்பலுக்கு மேலே உள்ள புகைபோக்கியில் இருந்து கரும்புகை, வியாழக்கிழமையும் (08) கிளம்பியது. அதாவது, 133 கார்டினல் வாக்காளர்கள் இன்னும் ஒரு புதிய போப்பைத் தேர்ந்தெடுக்கவில்லை. புதன்கிழமை(07) முதல்நாள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இரண்டாவது நாள் வாக்கெடுப்பு வியாழக்கிழமை (08) நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## RIMES இல்...

ஆபிரிக்கா மற்றும் ஆசியாவிற்கான பிராந்திய ஒருங்கிணைந்த பல-அபாய முன்னெச்சரிக்கை அமைப்பின் Regional Integrated Multi-Hazard Early Warning System for Africa and Asia (RIMES), நான்காவது அமைச்சக கூட்டம் கொழும்பில் உள்ள சினமன் லைஃப் ஹோட்டலில், வியாழக்கிழமை (08) நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பங்கேற்றார். அவருடன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பிரதான மண்டபத்துக்கு வருகைதந்தார்.

## மின் கட்டணத்தில் அடுத்த வாரம் மாற்றம்?




இந்த வருடத்திற்கான இரண்டாவது மின் கட்டண திருத்தம் தொடர்பான பிரேரணையை இலங்கை மின்சார சபை எதிர்வரும் வாரத்திற்குள் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத் தெரிவித்தார்.

மின்சார கட்டண திருத்தம் தொடர்பான பிரேரணையைப் பெற்ற பிறகு, 3 முதல் 6 வாரங்களுக்குள் இது தொடர்பில் ஆராய்ந்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதன் தீர்மானத்தை அறிவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் தொடர்புடைய திட்டங்கள் குறித்து பொதுமக்களிடமும் யோசனைகள் கேட்கப்படும்.

மின் கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளுமாறு சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளது, அதன்படி, எதிர்வரும் காலப்பகுதியில் மின் கட்டணங்கள் திருத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

### மாணவி அம்ஷிகாவின் விவகாரம்:

## ஆசிரியருக்கு இடமாற்றம்

2024ஆம் ஆண்டில், கொழும்பில் உள்ள ஒரு பாடசாலையில் 10ஆம் வகுப்பு மாணவி ஒருவர் சம்பந்தப்பட்ட அமைதியின்மை சம்பவம் குறித்து அமைச்சுக்குத் தகவல் கிடைத்துள்ளது என கல்வி அமைச்சு, வியாழக்கிழமை (08) மாலை ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

## மின்சாரக் கட்டணம் எவ்வளவு அதிகரிக்கும்



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமைய மின்சார கட்டணத்தை எந்தளவு அதிகரிப்பதற்கு தீர்மானித்திருக்கிறது என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

## "திசைக்காட்டி மீதான தமிழர்களின் நம்பிக்கை குறையவே இல்லை"



"தமிழ் மக்கள், தேசிய மக்கள் சக்தி மீது வைத்துள்ள நம்பிக்கை குறையவே இல்லை. மக்களின் எதிர்பார்ப்புகளை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம். அரசியல் இருப்புக்காகத் தேசிய மக்கள் சக்தியைத் தமிழ் மக்கள் நிராகரித்து விட்டதாக சில குழுக்கள் போலி பிரச்சாரம் முன்னெடுத்து வருகின்றன" என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 23 தடவைகள் பறந்தார் ரணில்

### 100 கோடி ரூபாய் வரை செலவு



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 ,2023 மற்றும் 2024ஆம் ஆண்டு வரையான 3 வருட காலப்பகு தியில் 23 வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளார். இதற்காக சுமார் 100 கோடி ரூபாய் வரையில் அரச நிதி செலவி டப்பட்டுள்ளதாக அரச தரப்பின் பிரதம கொறடாவும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(08) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் அரச தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமசந்திர எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கை

தொடர்ச்சி P2

## "உள்நோக்கத்திற்கு பதிலளிக்க ஒருவார காலம் அவகாசம்"



வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களின் பூர்வீக காணிகளை சுவீகரிப்பதற்காக 2025 .03.28ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பின் உள்நோக்கம் என்னவென பதிலளிப்பதற்கு அரசாங்கம், ஒரு வார கால அவகாசம் கோரியுள்ளது.

தொடர்ச்சி P2

## ஜூன் 2 வரையிலும் காலக்கெடு

உள்ளூராட்சி மன்றங்களில் 50% க்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் மேயர்கள், தலைவர்கள் மற்றும் தவிசாளர்களை நியமிக்கவும், நியமிக்கப்பட வேண்டிய பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அறிவிக்கவும் தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது என தெரிவித்துள்ளது.

339 உள்ளூராட்சி மன்றங்களுக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான உள்ளூராட்சித் தேர்தல் செவ்வாய்க்கிழமை (6) காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது.



இந்த நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஊடகத்துக்கு கருத்துரைத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க கூறியதாவது,

"உள்ளூராட்சி மன்றங்களில் 50% க்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்ற தொடர்புடைய அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு வரும் நாட்களில், தவிசாளர்கள், மேயர்கள், தலைவர்களை நியமிக்க அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும். ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கூடுதலாக நியமிக்கப்பட வேண்டிய பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

மேற்கூறிய ஏற்பாடுகள் முடிந்ததும், உள்ளூராட்சி பிரதிநிதிகளின் இறுதிப் பட்டியல் வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்படும்.

உள்ளூராட்சி அமைச்சால் வெளியிடப்பட்ட தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பின்படி,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



## அம்ஷிகா விவகாரம்
# செருப்பால் அடித்து காரி உமிழ்ந்து ஆவேசம்

அங்கு மாணவியின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

“எங்கள் பிள்ளை” “எங்கள் பிள்ளை” என உணர்வு பூர்வமாக கோஷங்களை எழுப்பி கொண்டிருந்தனர்.

மாணவியின் மரணத்திற்கு காரணமானவர்கள் தண்டனையின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று தெரிவித்து தங்களது ஆதரவு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததுடன் உயிரிழந்த மாணவிக்காக ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள்,

“அதிபரே வெளியே வா”, “அதிபரை கைது செய்”, ”அதிபரை கைது செய்” “இறுதி வரை போராடுவோம்”, “இறுதி வரை போராடுவோம்”, “கைது செய்”,“கைது செய்”, “கெட்டவனை கைது செய்”, “சங்கரனை கைது செய்”, “சங்கரனை கைது செய்” “வேண்டும்,வேண்டும் நீதி வேண்டும்”,“ “வெளியேவா வெளியவா யோகராணி வெளிய வா“, “வெளியேவா வெளியவா யோகராணி வெளிய வா என்று கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இதேவேளை, பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியரின் புகைப்படங்கள் தாங்கிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர். அதில், தற்கொலைக்கு தூண்டினார் என குற்றஞ்சாட்டப்பட்ட கொட்டாஞ்சேனையில் தனியார் வகுப்புகளை நடத்தும் ஆசிரியரின் புகைப்படமும் இருந்தது.

அந்த புகைப்படங்களுக்கு செருப்பால் அடித்த பெண்கள், காரி உமிழ்ந்து எச்சிலை அந்த புகைப்படங்கள் முகத்திலேயே துப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மிகவும் ஆக்ரோஷமாக, எதிர்ப்பு குரல் எழுப்பி கொண்டிருந்தமையால், பாடசாலைக்கு முன்பாக பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அவ்விடத்தில், வீதி தற்காலிகமாக மூடப்பட்டு மாற்று வழி போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த பெண்களில் ஒருவர் கருத்துரைக்கையில்,

“படிக்கும் சிறுமிகளிடம் உங்களுக்கு என்ன தேவை?, “15 வயதான பட்டாம்பூச்சி புள்ளை”, “வீட்டில் பொண்டாட்டி இல்லையா”? என்று கேட்ட அந்த பெண், பெற்றோர்களே, உங்களுடைய வீட்டில் பெண்களிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று ஆண் பிள்ளைகளுக்கு சொல்லி கொடுங்கள், எதிர்காலத்தில் இவ்வாறு இடம்பெறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். வித்தியாவுக்கு பின்னர் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம் என்றார்.

## மாணவி அம்ஷிகாவின் விவகாரம்:
# ஆசிரியருக்கு இடமாற்றம்

அது தொடர்பில் பாடசாலை அதிபரிடம் விளக்கம் கேட்கவும், சம்பவத்தில் தொடர்புடைய ஆசிரியரை உடனடியாக இடமாற்றம் செய்யவும் நடவடிக்கை எடுத்தது. இந்த சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணை அறிக்கை கோரப்பட்டுள்ளது, அது கிடைத்தவுடன் தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது,

பாலியல் வன்புணர்வுக்கு உள்ளானதன் பின்னர், மன உளைச்சலுக்கு உள்ளாகி தன் உயிரை மாய்த்துக் கொண்ட மாணவி டில்ஷி அம்ஷிகாவின் சாவுக்கு நீதி கேட்டு, கொழும்பில் இரண்டு ஆர்ப்பாட்டங்கள், வியாழக்கிழமை (08) முன்னெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# மின்சாரக் கட்டணம் எவ்வளவு அதிகரிக்கும்

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) நிலையியற் கட்டளையின் கீழ் கேள்வி எழுப்பி உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கையெழுத்திட்ட சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை மாற்றியமைத்து, தாம் ஆட்சிக்கு வந்த பிறகு புதிய நாணய நிதிய இணக்கப்பாட்டை எட்டுவோம் என தற்போதைய அரசாங்கம் தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை வழங்கியிருந்தது . இருந்தபோதிலும், ஆட்சிக்கு வந்த பிறகு, அந்த தேர்தல் வாக்குறுதியை மீறி, முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கையெழுத்திட்ட அதே நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டைப் பின்தொடர்வதால் நமது நாட்டு மக்கள் தற்போது பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுக்கமைய அரசாங்கம் தற்போது மின்சார கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. மின்சார உற்பத்தி செலவை அடிப்படையாகக்கொண்டு மின் கட்டணம் திருத்தப்பட வேண்டும் என்பதே நாணய நிதியத்தின் நிபந்தனை. அந்நிலைப்பாட்டில் இருந்தா அரசாங்கம் மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப் போகிறது?இந்நிலையில் மின் கட்டண திருத்தம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அளவும் நாணய நிதியத்தின் மின் உற்பத்தி செலவை அடிப்படையாகக் கொண்ட செலவுக்கும் இடையில் பாரிய வித்தியாசம் இருக்கிறது. ஆனால் அரசாங்கம் நாணய நிதியத்தின் மின் உற்பத்தி செலவுத் தொகையையே ஏற்றுக்கொண்டுள்ளது.

அவ்வாறு மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் அதனால் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு தொடர்பில் அரசாங்கம் மதிப்பீடொன்றை மேற்கொண்டுள்ளதா? பூச்சியம் மின் அலகிலிருந்து 90 அலகுவரை எந்தளவு மின் கட்டணம் அதிகரிக்கப் போகிறது?

அதேபோன்று டிஜிட்டல் ஏற்றுமதி சேவைக்கு நூற்றுக்கு 30 வீதம் வரி அறவிட வேண்டும் என நாணய நிதியம் தெரிவித்துள்ளதாகவும் அரசாங்கம் நூற்றுக்கு 15 சதவீதம் அறவிடப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. டிஜிட்டல் ஏற்றுமதி சேவைக்கு வரி அறவிட வேண்டும் என்பது நாணய நிதியத்தின் நிபந்தனையா ?

மின்சாரக் கட்டணத்தை 33 சதவீதமாகக் குறைப்பதாகக் கூறிய தற்போதைய அரசாங்கம், நிபந்தனைகளுக்கு உட்பட்டு மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கத் தயாராகி வருகிறது. சிரேஷ்ட பிரஜைகளினதும் சிறுவர்களினதும் சேமிப்பு கணக்குகளுக்கான 15 சதவீத வட்டி வழங்கப்பட்டு வந்தது. தற்போது அந்த வட்டி விகிதம் வழங்கப்படுவதில்லை. இவ்வாறு வழங்கப்படாமல் இருப்பது நாணய நிதியத்தின் நிபந்தனையா என கேள்விகளை எழுப்பினார்.

# 23 தடவைகள்...

யிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022 ஆம் ஆண்டு 4 வெளிநாட்டு பயணங்களும் , 2023 ஆம் ஆண்டு 14 வெ ளிநாட்டு பயண ங்களும் 2024 ஆம் ஆண்டு 5 வெளிநாட்டு பயண ங்களும் என்ற அடிப்படையில் 3 ஆண்டுகளுக்குள் 23 ளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் பலர் அரசமுறை விஜயத்தில் பங்கேற்றுள்ளனர்.. 2022 ஆம் ஆண்டு 63 பேர் 2023 ஆம் ஆண்டு 252 பேர் 2024 ஆம் ஆண்டு 111 பேர் என்ற அடிப்படையில் இக்காலப்பகுதியில் மாத்திரம் ரணில் விக்கிரமசிங்கவுடன் அரசாங்க செலவில் 436 பேர் வெளிநாட்டு பயணங்களில் பங்கேற்றுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க 2022 ஆம் ஆண்டு மேற்கொண்ட அரசமுறை பயணத்துக்கு 129 மில்லியன் ரூபாய் , 2023 ஆம் ஆண்டு 577 மில்லியன் ரூபாய் , 2024 ஆம் ஆண் 300 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் 100 கோடி ரூபா ய் வரை அரச நிதி செலவிடப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு பிரதிநிதிகள் குழு , 19 அரசமுறை பயணங்களை மேற்கொண்டுள்ளது. இந்தப்பயணங்களுக்காக 100 கோடி ரூபாய் வரையில் செலவிடப்பட்டுள்ளது என்றார்.

# “திசைக்காட்டி மீதான...

இது தொடர்பாக

அவர் மேலும் கூறியவை வருமாறு,‘பொதுத்தேர்தல் என்பது வேறு, உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது வேறு, எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளுடன்தான், உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவை ஒப்பிட வேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தால் 2018 தேர்தலில் வடக்கில் விரல் விட்டு எண்ணக்கூடிய வகையில்தான் தேசிய மக்கள் சக்திக்குப் பிரதிநிதித்துவம் இருந்தது. ஆனால், இம்முறை வடக்கில் எல்லா பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றுள்ளது. இது வரலாற்று முக்கியத்துவம் மிக்க விடயமாகும்.

எனினும், மக்களைப் பிரித்தாள்வதற்கு முற்படும் அரசியல் வாதிகளுக்கு இது பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டதாகப் போலி பிரச்சாரம் முன்னெடுத்து இன்பம் காண்கின்றனர்.



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மீதும், எம் மீதும், எமது அரசாங்கம் மீதும் தமிழ் மக்கள் வைத்துள்ள நம்பிக்கை அப்படியே தொடர்கின்றது. மக்களின் எதிர்பார்ப்புகளை எம்மால் தான் நிச்சயம் நிறைவேற்ற முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும். நிச்சயம் அதைச் செய்வோம். அதற்குரிய அடித்தளம் தற்போது இடப்பட்டு வருகிறது.

எனவே, சதிகார அரசியல்வாதிகளால் எம்மையும், மக்களையும் பிரிக்க முடியாது. இலக்கை நோக்கிய எமது பயணம் தொடரும். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த அத்தனை சொந்தங்களுக்கு நன்றிகள்;. அதேபோல் வாக்களிக்காதவர்களுக்கும் எமது சேவைகள் தொடரும்” என்றார்.

# “உள்நோக்கத்திற்கு பதிலளிக்க...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் விடுத்த விசேட கூற்றுக்கு பதிலளிக்கையிலேயே ஆளும் கட்சியின் சபை முதல்வரான அமைச்சர் பிமல் ரத்னாயக்க இந்த கால அவகாசத்தை கோரினார். விசேட கூற்றை சிறீதரன் எம்.பி. முன்வைத்து பேசுகையில்,

வடக்கு,கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் காணிகள் பலவற்றில் இப்போதும் இராணுவ முகாம்கள் உள்ளன. இராணுவ வசமே பெரும்பாலான காணிகள் உள்ளன. வடக்கு,கிழக்கில் பெரும்பகுதிகளில் மக்கள் இப்போதும் அகதிகளாக தனியார் வீடுகளிலும் முகாம்களிலும் வாழ்கின்றார்கள்.அவர்களின் சொந்த நிலங்களில் குறிப்பாக பலாலியில் கூட தமது சொந்த நிலங்களில் வாழ முடியாதவாறு 3000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் இராணுவத்தினரால் பிடித்து வைக்கப்பட்டுள்ளதால் அந்த மக்கள் வெவ்வேறு இடங்களில் குடியேறி வாழ்ந்து வருகின்றார்கள்.

கிளிநொச்சி நகரப்பகுதியில் கிட்டத்தட்ட 41 வீதமான காணிகள் இரா ணுவத்திடமே உள்ளன. 1956இலிருந்து 1970வரை அனுராதபுரம் மாவட்டத்திலிருந்து 26,000 வரை தமிழ் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன. அவர்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. இவ்வாறு தமது சொந்தக் காணிகள், நிலங்களை விட்டு அகதிகளாக முகாம்களில் மக்கள் வாழும் நிலையில் நான் கமத்தொழில், கால் நடை. காணி அமைச்சர் லால்காந்தவிடம் சில கேள்விகளை முன்வைக்கின்றேன்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழர்களின் பூர்வீக காணிகளை சுவீகரிப்பதற்காக 2025 .03.28 ஆம் திகதிய 24/30 ஆம் இலக்க வர்த்தமானி முன்னறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதை அமைச்சர் அறிவாரா?

மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் கோரப்பட்டுள்ள காணிகள் என்ன தேவைக்காக கோரப்பட்டுள்ளன என்பதையும் 5,700 ஏக்கர் வரையான காணிகளை அவசரமாக சுவீகரிக்க காரணம் என்ன என்பதையும் அமைச்சர் இந்த சபைக்கு அறிவிப்பாரா? வடக்கு,கிழக்கு மாகாணங்களில் நீண்ட காலம் நடைபெற்ற யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழும் நிலையில் அவர்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்காது மக்களின் காணிகளை சுவீகரிக்கும் இந்த வர்த்தமானி அறிவிப்பின் உள்நோக்கம் என்ன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா? என்றார்.

# ஜூன் 2 வரையிலும்...

உள்ளூராட்சி மன்றங்கள் ஜூன் 2ஆம் திகதி முதல் கூட்டத்தை நடத்த உள்ளன. அதற்கு முன்னர் எங்கள் தரப்பிலிருந்து என்ன செய்ய வேண்டும் என்பதை நாங்கள் முடிவு செய்வோம் என்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி 3,921 இடங்களைப் பெற்று 150க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மையைப் பெற்றது.

இருப்பினும், அவர்கள் சுமார் 100 உள்ளூராட்சி மன்றங்களில் மட்டுமே ஒட்டுமொத்த கட்டுப்பாட்டைப் பெற முடிந்தது.

சமகி ஜன பலவேகய 1,766 இடங்களைப் பெற்றது. அதே நேரத்தில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 742 இடங்களைப் பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் கூட்டணி முறையே 379 மற்றும் 300 இடங்களைப் பெற்றன. நாடு முழுவதும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் சர்வஜன பலய 22 இடங்களைப் பெற்றது.

## அமெரிக்காவின் தீர்வை வரி தொடர்பான
# பேச்சுக்கு குழு அனுமதி

அமெரிக்காவின் பரஸ்பர தீர்வை வரி தொடர்பான அடுத்தகட்ட பேச்சுவார்த்தைக்கு அமெரிக்காவின் வர்த்தக நிறுவன பிரதிநிதிகள் குழு அனுமதி அளித்துள்ளதாக பிரதி நிதி அமைச்சர் ஹர்ஷன சூரியபெரும தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (08) இடம் பெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

வருமான பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் சுங்கம் தொடர்பில் பிரசுரிக்கப்பட்ட இந்த வர்த்தமானி தொடர்பில் விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வாகன இறக்குமதி இதில் பிரதான அம்சமாக உள்ளது . 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது, வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள் வெற்றி பெற்றன. இதன் பிரதிபலனாகவே பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது. இதன் பின்னரே வாகன இறக்குமதிக்குக் கட்டம் கட்டமாக அனுமதி வழங்கப்பட்டது. தனியார் தரப்பினர் பெருமளவிலான வாகனங்களை தற்போது இறக்குமதி செய்துள்ளனர்.

நிறைவடைந்த 6 மாத காலத்தில் பொருளாதாரம் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அனைத்து குற்றச்சாட்டுக்களும் பொய்யாக்கப்பட்டுள்ளன. நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பு 6.5 பில்லியன் டொலர்களாக நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தாண்டுக்குள் வெளிநாட்டு கையிருப்பை 7 பில்லியன் டொலர்களாக அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பரஸ்பர தீர்வை வரி பொருளாதாரத்துக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் காணப்பட்டது. 90 நாட்கள் காலவகாசம் வழங்கப்பட்டது. இந்த சவாலை வெற்றி கொள்வதற்கு ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை இராஜதந்திர மட்டத்தில்முன்னெடுத்தார் என்றார்.

# “தமிழர்களை தமிழர்கள் அழிக்கும் ஆணை”

எஸ்.ஆர்.லெம்பேட்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வைத்துப் பார்க்கின்ற போது வடக்கு கிழக்கில் எந்த கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே நாங்கள் கூறியது போல, தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.



மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வியாழக்கிழமை (8) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், “நடைபெற்று முடிந்துள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் வடக்கு கிழக்கில் எமக்கு ஆணை தந்துள்ளனர். எதிர் வரும் காலங்களில் அனைவரும் ஒற்றுமையாக செயல்படவில்லை என்றால் மக்கள் வழங்கிய ஆணையை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற செய்தியை சொல்லியுள்ளனர்.

நாங்கள் ஒற்றுமையாக இல்லாத நிலையில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஜே.வி.பி. அரசாங்கத்திற்கு கூடுதலாக மக்களின் ஆதரவு கிடைக்கப் பெற்றுள்ளமை அனைவரும் அறிந்த விடயம். எனினும் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் ஜே.வி.பி. பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது.

தமிழர்களைத் தமிழர்கள் அழிக கூடிய வகையில் தமது ஆணையை வழங்கி உள்ளனர். மேலும் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாகப் பயணிக்க வேண்டும் என்ற செய்தியையும் சொல்லி இருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலை இயக்கத்தினை பொறுத்த வகையில் அடுத்தடுத்து வருகின்ற தேர்தலாக இருக்கலாம், போராட்டங்களாக இருக்கலாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற அடிப்படையில் செயல்படக்கூடிய ஒரு முயற்சியை நாம் முன்னெடுக்கின்றோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வைத்துப் பார்க்கின்றபோது, வடக்கு, கிழக்கில் எந்த கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே நாங்கள் கூறியது போல் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம். நாங்கள் தமிழரசு கட்சியுடனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அணியுடனும் நாங்கள் பேசிக்கொண்டு இருக்கின்றோம்.

எங்களுடைய முதல் ஆட்சி அமைக்கின்ற செயல்பாடுகள் தமிழ்த் தேசிய கட்சிகளுடன் இருக்கும். அதனடிப்படையில் பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக ஒரே அணியாகச் செயல்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவோம். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்பதற்காக மக்கள் வாக்குகளை வழங்கி உள்ளனர்.

மக்களின் ஆணையை உணர்ந்தவர்களாக நாங்கள் செயல்பட வேண்டும்” என கூறியுள்ளார்.

# வாகன விபத்தில் நால்வர் காயம்



தங்காலை - ஹம்பாந்தோட்டை பிரதான வீதியில் ரன்ன வாடிகல பிரதேசத்தில் வியாழக்கிழமை (08) காலை இடம்பெற்ற விபத்தில் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹுங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை- பதுளை தனியார் பேருந்தொன்று குறித்த வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோதியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

விபத்தின்போது, பேருந்தில் பயணித்த நான்கு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹுங்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில்

# “செயற்கை நுண்ணறி திறனை ஆராய்க”

## ஹரிணியுடனான சந்திப்பில் அஜய் பங்கா வலியுறுத்தல்

இலங்கையின் வளர்ச்சி முன்னுரிமைகள் மற்றும் மூலோபாய ஒத்துழைப்பைத் தொடர்வது குறித்து விவாதிப்பதற்காக பிரதமர் ஹரிணி அமரசூரிய, உலக வங்கிக் குழுவின் தலைவர் அஜய் பங்காவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தார்.



இலங்கையின் சமீபத்திய பொருளாதார நெருக்கடியின் போது, உலக வங்கியின் ஆதரவிற்குப் பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

மேலும், உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சிக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

அரசாங்கத்தின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை பங்கா பாராட்டினார்.

மேலும் பொருளாதார மீட்சியின் முக்கிய இயக்கிகளாக வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வேலைவாய்ப்பு தரத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

சுகாதாரம், கல்வி, விவசாயம், சுற்றுலா மற்றும் உற்பத்தித் தொழில்கள் போன்ற முக்கியமான துறைகளில் முதலீடு செய்வது குறித்து விவாதங்கள் நடத்தப்பட்டன. முக்கிய துறைகளை, குறிப்பாக விவசாயத்தை மாற்றுவதற்கு செயற்கை நுண்ணறிவின் திறனை பங்கா எடுத்துரைத்தார், மேலும் புதுமை மற்றும் உற்பத்தித்திறனுக்கான அதன் பயன்பாட்டை ஆராய இலங்கையை ஊக்குவித்தார்.

வளர்ந்து வரும் தொழில்களின் தேவைகளுக்கு ஏற்ப சுகாதாரக் கொள்கையை வலுப்படுத்தவும் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வியை விரிவுபடுத்தவும் தொடர்ந்து முயற்சிகளை பிரதமர் குறிப்பிட்டார்.

பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்க

# கொழும்பு கிளை நிர்வாகிகள் 2025/2026

பேராதனை பல்கலைக்கழக பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் (AAUPCC) 34ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் கொழும்பு 07இல் உள்ள SLIDA நிறுவனத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் 2025 மார்ச் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது.

AAUPCC கொழும்புப் பிரிவின் முன்னாள் தலைவரான டி.பி. மெண்டிஸ் பிசி பிரதம விருந்தினராகவும், மேல் மாகாண பிரதம செயலாளர் தம்மிகா விஜயசிங்க கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

2025/2026 காலப்பகுதிக்கு பின்வரும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: பாலித சியம்பலாபிட்டிய,

பொதுச் செயலாளர்: சண்டிக இந்திகடஹேன,

பொருளாளர்: எஸ்.எம்.ஞானரத்ன,

உப தலைவர்கள்: ஜகத் தஹநாயக்க, ரஞ்சித் டி அல்விஸ், குமுதினி குலதுங்க, ஈஷா நாணயக்கார மற்றும் ஹசந்த பலிஹக்கார,

உதவிச் செயலாளர்கள்: ஷ்யாமலி பெரேரா மற்றும் யமுனா அபயவர்தன,

பொருளாளர்: உதவி ரஞ்சித் கருணாரத்ன,

இணைஆசிரியர்: பி.பாலசிங்கம், நெலிய பெர்னாண்டோ மற்றும் ஃபரீசா கஸ்ஸாலி

ஒருங்கிணைப்பாளர்: சதுரங்க வீரசிங்க,

கணக்காய்வாளர்: எஸ்.சி.மாயாதுன்னே

நிர்வாக கவுன்சிலின் உறுப்பினர்களாக 21 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட னர்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த

# 15 இளைஞர்கள் நாடு திரும்பினர்

டி.கே.ஜி.கபில

மியன்மாரில் உள்ள சைபர் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கை இளைஞர்கள் புதன்கிழமை (07) காலை சர்வதேச இடம்பெயர்வு அமைப்பால் ( International Organization for Migration ) மீட்கப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.



வெளிவிவகார வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் இலங்கை அரசாங்கம், தாய்லாந்து மற்றும் மியான்மர் அரசாங்கங்களுடன் நடத்திய இராஜதந்திர நடவடிக்கையைத் தொடர்ந்து, இந்த இளைஞர்கள் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 15 பேரும் மியன்மாரின் மியாவாடியில் உள்ள சைபர் முகாமில் இருந்து மீட்கப்பட்டு, தாய்லாந்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவர்களை மியான்மரில் இருந்து தாய்லாந்திற்கும், அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கும் கொண்டு செல்லும் பொறுப்பை சர்வதேச இடம்பெயர்வு அமைப்பு (IOM) ஏற்றுக்கொண்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட அனைவரும் புதன்கிழமை(7) அன்று மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.









# KDUவின் சுத்தம் செய்யும் நிகழ்வு

ரஞ்சித் ராஜபக்ஷ


ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், துணைவேந்தர், கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களால், சிவனொளி பாத மலையை சுத்தம் செய்யும் நிகழ்வு 300 மாணவர்களின் பங்கேற்பில் வியாழக்கிழமை (08) அன்று நடைபெற்றது.


2024-2025ஆம் ஆண்டுக்கான பருவ காலத்தில், யாத்ரீகர்களால் சிவனொளி பாதமலை மேல் தளத்திலிருந்து நல்லத்தண்ணிய வரை, வீதியில் இருபுறம் கொட்டப்பட்டிருந்து பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன், திடக்கழிவுகள் சேர்க்கப்பட்டு மஸ்கெலியா பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தால் இந்த நிகழ்ச்சி இரண்டாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், புனித இடமாகக் கருதப்படும் சிவனொளி பாத மலையின் வரலாற்று மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாகவும், பல்கலைக்கழகத்தின் பிரிவுத் தலைவர் சனத் டி சில்வா தெரிவித்தார். இதற்கு முப்படைகளின் ஒத்துழைப்பும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.









# ‘தலசீமியா’வின் ஆபத்து தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும்

இலங்கையில் அதிகரித்து வரும் தலசீமியாவின் சுமை குறித்து சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர், ஆயிரக்கணக்கான குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் லட்சக்கணக்கானோர் அறியாமலேயே இந்த கோளாறுக்கான மரபணுவைச் சுமந்து செல்கின்றனர்.

தலசீமியா என்பது ஒரு பரம்பரை இரத்தக் கோளாறாகும், இது ஆரோக்கியமான சிவப்பு இரத்த அணுக்களை உற்பத்தி செய்யும் உடலின் திறனைப் பாதிக்கிறது.

உலக தலசீமியா தினத்துடன் இணைந்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த தொற்றா நோய்கள் பிரிவின் இயக்குநர் நிபுணர் டாக்டர் சமித்தி சமரக்கோன், இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் 40 முதல் 50 புதிதாகப் பிறந்த குழந்தைகள் இந்த நோயால் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

நாட்டில் சுமார் 500,000 பேர் இந்த கோளாறுக்கு காரணமான குறைபாடுள்ள மரபணுக்களில் ஒன்றின் கேரியர்கள் என்றும் டாக்டர் சமரக்கோன் தெரிவித்தார், இது அதிகரித்த விழிப்புணர்வு மற்றும் தடுப்பு உத்திகளின் அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகிறது.

ஆண்டுதோறும் மே 8 ஆம் திகதி உலக தலசீமியா தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு “தலசீமியாவுக்கு ஒன்றாக: சமூகங்களை ஒன்றிணைத்தல், நோயாளிகளுக்கு முன்னுரிமை அளித்தல்” என்ற கருப்பொருளின் கீழ் கொண்டாடப்பட்டது.

தலசீமியா என்பது ஒரு பிறவி மரபணு அசாதாரணமாகும், இது அசாதாரண ஹீமோகுளோபின் மற்றும் குறைக்கப்பட்ட இரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கையால் வகைப்படுத்தப்படுகிறது. தலசீமியா என்பது ஒரு நாள்பட்ட நோயாகும், இதற்கு வாழ்நாள் முழுவதும் கண்காணிப்பு மற்றும் சிகிச்சை தேவைப்படுகிறது.

எலும்பு மஜ்ஜை என்பது இரத்த அணுக்களை உருவாக்கும் எலும்பு திசுக்களைக் குறிக்கிறது. சிவப்பு இரத்த அணுக்கள் (RBCs), வெள்ளை இரத்த அணுக்கள் (WBCs) மற்றும் பிளேட்லெட்டுகள். தலசீமியாவில், எலும்பு மஜ்ஜை போதுமான அளவு இரத்த சிவப்பணுக்களை உற்பத்தி செய்கிறது, இதன் விளைவாக இரத்த சோகை ஏற்படுகிறது.

ஒரு குழந்தை ஒரு குறைபாடுள்ள ஹீமோகுளோபின் மரபணுவைப் பெற்றோரிடமிருந்தோ அல்லது இருவரிடமிருந்தோ பெறும்போது, உடல் குறைபாடுள்ள ஹீமோகுளோபினை உருவாக்குகிறது. ஹீமோகுளோபின் என்பது இரும்பு-பிணைப்பு புரதமாகும், இது ஆல்பா மற்றும் பீட்டா சங்கிலிகளால் ஆனது. இந்த புரத அமைப்பு ஆக்ஸிஜனை பிணைப்பதிலும் எடுத்துச் செல்வதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

பாதிக்கப்பட்ட மரபணுவின் வகையைப் பொறுத்து, அசாதாரண ஹீமோகுளோபின் அளவு மாறுபடும். அசாதாரண ஹீமோகுளோபின் அளவு அதிகமாக இருந்தால், தலசீமியாவின் தீவிரம் அதிகமாகும்.

அசாதாரண ஹீமோகுளோபின் இரத்தத்தில் ஆக்ஸிஜனைக் கொண்டு செல்லத் தவறி, இரத்த சோகை மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிகுறிகளில் விளைகிறது. ஹீமோகுளோபின் மற்றும் இரத்த சிவப்பணுக்களின் அதிகரிப்புடன் உடல் இந்த மாற்றத்திற்குப் பதிலளிக்கிறது. இந்த அதிக உற்பத்தி, உந்துதல் அதிக அறிகுறிகளையும் சிக்கல்களையும் ஏற்படுத்துகிறது.


# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள். நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனொ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை–19

# பண்டாரநாயக்கவின் பொருளாதார வைத்தியம்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1956இல் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்க, புதிய வகைப் பொருளாதார மாதிரியை முயற்சித்து ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் மீதான மக்களின் அதிருப்தி, இடதுசாரிக் கட்சிகளுடன் புத்திசாலித்தனமாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட தேர்தல் ஒப்பந்தங்கள், சிங்கள கிராமப்புறங்களில் வலுப்பெற்று வந்த தேசியவாதத்தின் இரண்டாம் அலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து பயன்படுத்தியமை ஆகிய காரணங்களால் அவரால் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது. ஆனால், அதே அம்சங்களே அவரது ஆட்சியைப் பின்னாளில் ஆட்டங்காண வைத்தது. இந்த சக்திகள் அவர் முன்னோக்கிய முற்போக்குப் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த அனுமதிக்கவில்லை.

1956இல் பண்டாரநாயக்க அலைக்குப் பின்னால் இருந்த சக்திகள் (1) புத்த மறு மலர்ச்சி (1956-7ஆம் ஆண்டில் புத்தரின் 2,500ஆவது ஆண்டு விழா கொண்டாட்டமான புத்த ஜெயந்தியின் காரணமாக இது வலுப்பெற்றது) (2) மொழியியல் தேசியவாதம் (சிங்கள மொழியினூடாக வரலாற்று ரீதியாக சிங்கள மக்களை வரையறுத்து, அவர்களின் கலாச்சாரத்தையும் மரபுகளையும் நிலைநிறுத்தியமை. அதேபோல, புத்த மதத்தின் பாதுகாவலர்கள் அவர்களே என்ற மாயையை உருவாக்கியமை) (3) தமிழர்கள் மற்றும் ஆங்கிலம் படித்த உயர்குடியினருக்கு எதிரான மனநிலையை ஒருமைப்படுத்தியமை (கிராம நடுத்தர வர்க்கத்தினரின் - புத்த மத குருக்கள், வட்டார மொழி ஆசிரியர்கள், ஆயுர்வேத மருத்துவர்கள் மற்றும் கடைக்காரர்-கடன் கொடுப்பவர்கள், மொழியியல் தேசியவாதத்துடன் பின்னிப் பிணைந்த மத மறுமலர்ச்சியின் உணர்வுகளை உணர்ந்தோர் - பொருளாதார விரக்தியும், பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் வேலையின்மையின் உச்சத்தில் இருந்த காலகட்டத்தில், ஆங்கிலத்தில் கல்வியறிவு இல்லாததால் அரசுப் பணிகளிலிருந்து ஏமாற்றப்பட்டதாக நம்பிய வர்க்கமும், ஆங்கிலம் பேசும் வகுப்புகள் மற்றும் அரசு வேலைகளில் நியாயமான பங்கை விட அதிகமாக இருப்பதாகக் கருதப்பட்ட தமிழர்களின் சலுகை பெற்ற பங்கை வெறுத்த வர்க்கமும் ஒன்றிணைந்தன).

1956க்கு முந்தைய காலத்தை, அதன் செல்வாக்கு சவால் செய்யப்படாமல் இருந்த ஒரு பொற்காலமாக, கொழும்பின் கடைகள் மற்றும் சேமிப்பகங்கள் விலையுயர்ந்த பெண்கள் காலணிகள் முதல் மோட்டார் கார்கள் வரை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களால் நிரம்பியிருந்தன. சட்டம் ஒழுங்கு ஆட்சி செய்ததை, கொலனித்துவ நிலையிலிருந்து சுதந்திரத்திற்கு அமைதியான மாற்றத்தை ஏற்படுத்திய பன்முக சமூகத்தைக் கொண்ட ஒரு நாட்டின் உச்சபட்ச எடுத்துக்காட்டாக இலங்கையைக் காட்ட முடிந்தது. பண்டாரநாயக்காவுக்கு முந்தைய பொற்காலத்தின் அழகிய படத்தின் உண்மை என்னவாக இருந்தாலும், பண்டாரநாயக்க சகாப்தம் மிகவும் வித்தியாசமான காலம் என்பதை மறுக்க முடியாது. உயர் குடியினரின் செல்வாக்கு நிச்சயமாகக் குறைந்தது. பொதுச் சேவையின் மன உறுதியிலும் செயல்திறனிலும் பேரழிவு தரும் சரிவு இல்லாதிருந்தால், பண்டாரநாயக்கவால் வெற்றிகரமான ஒரு பொருளாதார மாதிரியைச் சாத்தியப்படுத்தியிருக்க முடியும்.

பண்டாரநாயக்கவின் வருகைக்குப் பிறகு, கொழும்பின் அத்தியாவசியமற்ற பொருட்களை விற்கும் கடைகள் வெறுமையான அலுமாரிகள் போலத் தோன்றின. ஜூலை 1956இல் சிங்களத்தை ஒரே தேசிய மொழியாகத் திணித்ததற்காக நடந்த இனக் கலவரம் 1958இல் மிக மோசமான இனக் கலவரம் மற்றும் வன்முறை, 1959 செப்டெம்பரில் பண்டாரநாயக்க படுகொலை, அதைத் தொடர்ந்து வந்த இடைக்கால அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி என தொடர்ந்த நிகழ்வுகள் பண்டாரநாயக்கவின் பொருளாதார முறையை முன்னெடுக்கவியலாமல் செய்தன. இந்தக் குழப்பப் பட்டியலுக்கான பழியில் ஓரளவுக்குத் பண்டாரநாயக்க மீதுதான் சுமத்தப்பட வேண்டும் என்று சொல்வது நியாயமாகத் தெரிகிறது. மொழிப் பிரச்சினையை அவர் சுரண்டியது வகுப்புவாதக் குழப்பத்துடன் தொடர்புடையது. ஆங்கிலம் படித்த உயர் குடியினருக்கும் தொழிலாளர் ஒழுக்கத்திற்கும் விரோதமான போக்குகளை அவர் ஊக்குவித்ததற்கு வேலைநிறுத்தங்கள் பரவுவதற்கும் அதன் விளைவாக ஏற்பட்ட கோளாறுகளுக்கும் தொடர்புடையது.

1958இல் பண்டாரநாயக்க அரசாங்கம் ஒரு நீண்டகால, பேரியல்-பொருளாதார தேசிய மேம்பாட்டுத் திட்டத்தை வகுத்தது. இது பிரதமர் பண்டாரநாயக்க தலைமையேற்ற தேசிய திட்டமிடல் கவுன்சிலால் வரையப்பட்ட பத்தாண்டுத் திட்டம். இந்தத் திட்டத்தைத் தயாரிப்பதற்காகச் சர்வதேச அளவில் புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர்கள் அழைக்கப்பட்டார்கள். அவர்களில் ஜோன் ராபின்சன், ஜே.ஆர்.ஹிக்ஸ், கன்னர் மிர்டல், ஆஸ்கர் லாங்கே மற்றும் நிக்கோலஸ் கால்டோர் ஆகியோர் அடங்குவர். நாட்டின் எதிர்கால பொருளாதார வளர்ச்சி எவ்வாறு தொடர வேண்டும் என்பதில் இந்தப் பொருளாதார வல்லுநர்களிடையே அடிப்படை வேறுபாடுகள் இருந்தன. கேம்பிரிட்ஜ் பள்ளியின் முன்னணிப் பெண்மணியான ஜோன் ராபின்சன், எதிர்காலம் தொழில் மயமாக்கலில் உள்ளது என்ற கருத்தைக் கொண்டிருந்தார். பாரம்பரிய விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும் என்றும், அதிக மூலதனம் இல்லாமல் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பு அடைய முடியும் என்றும் ஜே.ஆர். ஹிக்ஸ் வாதிட்டார். நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் உணவு உற்பத்தியை மேம்படுத்துவதற்கான எதிர்கால பெரிய அளவிலான திட்டங்களுக்குத் தோட்டத் துறை முக்கியமானது என்று நிக்கோலஸ் கால்டோர் வாதிட்டார். தோட்ட விவசாயத்தின் வளர்ச்சிக்கான பெரிய அளவிலான திட்டங்களுடன் ஒப்பிடும்போது, அவை வீணானதாக இருக்கும். மேலும் - அது எவ்வளவு அசாதாரணமாகத் தோன்றினாலும் - முதன்மைப் பொருட்களின் ஏற்றுமதியைச் சார்ந்து வாழ்வாதாரம் இல்லாத நாடுகளுடன் ஒப்பிடும்போது ‘கொலனித்துவப் பொருளாதாரம்” பாதகமாக உள்ளது என்பதை அவர் மறுத்தார்.

பத்து வருடத் திட்டம் ஒரு விரிவான ஆவணமாகும். இது மக்கள்தொகை எதிர்காலத்தின் மதிப்பீட்டில் தொடங்குகிறது, பல்வேறு துறைகளின் ஒட்டுமொத்த அளவுகள் மற்றும் வளர்ச்சி இலக்குகளைக் கூறுகிறது, மேலும் திட்டத்தை நிறைவேற்றக் கிடைக்கக்கூடிய வளங்களின் வகைகளின் மதிப்பீடுகளுடன் முடிவடைகிறது. இந்தத் திட்டம் பத்து ஆண்டுகளில் மொத்தம் ரூ.13,600 மில்லியன் முதலீட்டை வழங்கியது. இதில் தொழிற்றுறைக்கு 17%, தோட்ட விவசாயம் 9%, உள்நாட்டு விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு 14% மற்றும் வீட்டுவசதி, சுகாதாரம் மற்றும் கல்வி 26% பெற வேண்டும். தேவையான மூலதனத்தின் பெரும்பகுதி உள்நாட்டு நிதியிலிருந்து வர வேண்டும், ரூ.1,275 மில்லியன் மட்டுமே வெளிநாட்டு மூலங்களிலிருந்து வர வேண்டும். உள்நாட்டு நிதி பெரும்பாலும் தன்னார்வ சேமிப்புக்குப் பதிலாகக் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

இந்தத் திட்டத்தின் முக்கிய உத்தி, நாட்டை அனைத்து நுகர்வோர் பொருட்களின் இறக்குமதியிலும் தன்னிறைவு அடையச் செய்வதும், அதன் விளைவாக வரும் அந்நியச் செலாவணி சேமிப்பைப் பயன்படுத்தி தொழில்துறை மேம்பாட்டிற்கான மூலதனப் பொருட்களின் இறக்குமதிக்கு நிதியளிப்பதுமே. அவ்வகையில், இது மிகவும் முற்போக்கான திட்டமாகும். ஏக்கருக்கு சராசரி மகசூலை 38 புஷல்களில் இருந்து 48 புஷல்களாக அதிகரிப்பதன் மூலம் அரிசியில் தன்னிறைவை அடைய முடியும் என்று திட்டம் வலியுறுத்தியது. இரட்டைப் பயிர்ச் செய்கை, நெல் மண்ணின் அறிவியல் வரைபடமாக்கல், உரம் மற்றும் அதிக விளைச்சல் தரும் இனங்களைப் பயன்படுத்துதல் மற்றும் உத்தரவாத விலைத் திட்டம் மூலம் இவை அடையப்பட வேண்டும்.

1968இற்குள் கரும்பு உற்பத்திக்கான நிலத்தை அதிகரித்து, 68,000 ஏக்கர் கரும்பிலிருந்து 272,000 தொன் சீனியை உற்பத்தி வேண்டும் என்பது திட்டத்தின் இலக்கு. இதன்படி, ஒரு ஏக்கருக்கு 40 தொன் கரும்பு அல்லது 4 தொன் சீனியை விளைவிக்க வேண்டும். அதே வழியில், உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், கோப்பி, பால், இறைச்சி, முட்டை, புகையிலை போன்றவற்றின் முழு திட்டமிடப்பட்ட நுகர்வுத் தேவைகளையும் உள்நாட்டு உற்பத்தி மூலம் அடைய இந்தத் திட்டம் முயன்றது.

இலங்கையின் அபிவிருத்திக்கான பிரதான உத்தி தொழில் மயமாக்கல் என்று திட்டம் கூறியது. தோட்ட விவசாயத்தைப் பொறுத்தவரை, மீள் பயிரிடுதல் மற்றும் மறுவாழ்வு மானியங்கள் மூலம் அந்தத் துறையின் வளர்ச்சியைத் தொடர்வதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டிருந்தது. இந்தத் திட்டம் வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இந்த வகையில் அது வேலைவாய்ப்புத் தேவைகளையும் பல்வேறு துறைகளின் உறிஞ்சும் திறனையும் மட்டுமே கணக்கிட்டது. பத்தாண்டுத் திட்டம் என்பது முதலாளித்துவ நோக்குடைய பொருளாதார வளர்ச்சியின் ஒரு வழக்கமான திட்டமாகும்.

அதன் அக்கறை சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தையோ அல்லது பெரும்பான்மையான மக்களின் வறுமையையோ அல்ல, மாறாகப் பேரியல் பொருளாதார நிலைகளைப் பற்றியது. அங்கு சமூக திட்டமிடல் முற்றிலும் இல்லை. இவ்விடத்தில் பண்டாரநாயக்கவின் திட்டம் சற்று வேறுபட்டது.

# கடிதங்கள்

## ஒன்பது வளைவு பாலத்தின் நீர் கசிவு

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்த தொல்பொருள் நினைவுச் சின்னமும், மலையக ரயில் பாதையில் ஒரு அற்புதமான படைப்பாகவும் விளங்கும் ‘எல்ல ஒன்பது வளைவு’ பாலத்தில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கன மழையின்போது, வளைவின் வழியாகத் தண்ணீர் உள்ளே ஊடுருவுவதாகப் பாலத்தின் தன்னார்வக் காவலர் டபிள்யூ.எம்.சுமனசேன கூறினார்.

இதுகுறித்து ரயில்வே துறையின் பாலங்களுக்குப் பொறுப்பான பிராந்திய அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, இந்த விடயம் குறித்து புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும், சம்பவ இடத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த பாலம் 1921இல் கட்டி முடிக்கப்பட்டதாக ரயில்வே பதிவுகள் கூறுகின்றன. எல்ல மற்றும் தெமோதரை ரயில் நிலையங்களுக்கு இடையில் கோட்டுவல பகுதியில் கட்டப்பட்டுள்ள இந்தப் பாலம் 300 அடி நீளம், 25 அடி அகலம், 80 அடி உயரம் கொண்டதாகும்.

இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பாலத்தின் தன்னார்வக் காவலர் மற்றும் அப்பகுதி மக்களின் கோரிக்கையாகும்.

– பாலித்த ஆரியவங்ச

SLT – MOBITELஇன்

# வெசாக் சுகாதார பராமரிப்பு முகாம்- 2025

வெசாக் பௌர்ணமியை முன்னிட்டு, SLT-MOBITEL விசேட சுகாதார முகாமை 2025 மே மாதத்தின் முதல் வாரத்தில் கம்பஹா SLT-MOBITEL பிராந்திய அலுவலக வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இப்பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 550க்கும் அதிகமானவர்களுக்கு அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்கியிருந்தது. 'சம்பந்தியாவே தஹமி சத்காரய' எனும் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சமூக, சூழல் மற்றும் ஆளுகை (ESG) அர்ப்பணிப்புகளின் பிரகாரம் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக eChannelling, Sethma Hospitals, J.A.Wimalasooriya opticians மற்றும் Parampara அகர்பத்திகள் ஆகியவற்றுடன் SLT-MOBITEL கைகோர்த்திருந்தது. இலவச குருதி மற்றும் நீரிழிவு பரிசோதனை, இலவச electrocardiogram (ECGs) பரிசோதனை, கண் பரிசோதனை, போஷாக்கு ஆலோசனை சேவைகள் மற்றும் பொது மருத்துவ ஆலோசனை வழங்கல்கள் போன்றன இதன்போது முன்னெடுக்கப்பட்டிருந்தன.

திறமை வாய்ந்த வைத்திய நிபுணர்கள் நாள் முழுவதும் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை உடனிருந்து, தனிப்பயனாக்கப்பட்ட



மருத்துவ ஆலோசனைகளை வழங்கியதுடன், முழுமையான பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். இந்த நிகழ்வு மிரிஸ்வத்த, யக்கல, உடுகம்பொல, மகேவிட, பெலும்மஹார, கணேமுல்ல மற்றும் கம்பஹா நகரத்தைச் சேர்ந்த மக்களுக்கு சேவை செய்தது. அவர்களில் பலர் வழக்கமான சுகாதார சேவைகளை பெறுவதில் மட்டுப்படுத்தப்பட்ட அணுகலைக் கொண்டுள்ளவர்களாகும்.

நேரடியாக முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுக்கு அப்பால் நன்மைகளை விரிவுபடுத்துவதற்காக, eChannelling மூலம் வைத்திய ஆலோசனைக்களை பெற்றுக் கொடுப்பதற்கு டிஜிட்டல் அணுகலையும் SLT-MOBITEL செயல்படுத்தியது. குறித்த தினத்தில் மருத்துவர்கள் ஒன்லைன் ஆலோசனைகளுக்காக செயலாற்றியிருந்தனர். இதனால் மக்கள் தங்கள் வீடுகளில் இருந்தபடியே மருத்துவ நிபுணர்களுடன் இணைந்தனர்.

சமூக பொறுப்புக்கூரல் மற்றும் சமூகத்துக்கு மீள வழங்கல் என்பதில் கவனம் செலுத்தும் நிறுவனம் எனும் வகையில் SLT-MOBITEL இனால், முன்னெடுக்கப்பட்ட சுகாதார முகாமினூடாக, சமூகத்தாருக்கு சுகாதாரத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, தமது சுகாதார நலனுக்கு முன்னுரிமையளிக்க தனிநபர்களை தூண்டுவதாக அமைந்திருந்தது.

புதுமையான தொழில்நுட்பத்தினுடன் சுகாதார சேவைகள் எவ்வாறு ஒன்றிணைந்து மக்களின் வாழ்வில் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில், நிறுவன சமூகப் பொறுப்பு மற்றும் சமூக நல்வாழ்வுக்கான SLT-MOBITEL இன் பரந்த உறுதிமொழியின் ஒரு பகுதியாகவும் இந்த நிகழ்வு அமைந்தது.

ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் இடமிருந்து

# மியன்மாருக்கு மனித நேய உதவி

ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ், அண்மையில் மியன்மாரில் ஏற்பட்ட 7.7 ரிச்டர் அளவிலான பூமி அதிர்வினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனித நேய உதவியை வழங்க முன்வந்திருந்தது. அதன் பிரகாரம், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களை நன்கொடையாக வழங்கியிருந்தது.

ஏப்ரல் 4ஆம் திகதி இந்த நன்கொடை வழங்கலை பூர்த்தி செய்த ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ், மனிதநேய முயற்சிகளுக்கு உதவும் வகையில், இடர் முகாமைத்துவ நிலையத்துக்கு (DMC) பெருமளவு அத்தியாவசிய மருந்துப் பொருட்களை கையளித்திருந்தது. இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் கோரிக்கையின் பிரகாரம், இடர் முகாமைத்துவ நிலையத்தின் (DMC) முயற்சிகளுக்கு ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் ஆதரவளித்திருந்தது.

ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இடர் முகாமைத்துவ நிலையத்தின் (DMC) பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட (ஓய்வுபெற்ற) ndc IGகுறிப்பிடுகையில், "இடர் நிலையின் போது, செயலாற்றுவதில் தனியார் துறை ஆற்றும் முக்கிய பங்களிப்பை இந்த செயற்பாடு வெளிப்படுத்தியுள்ளது. வளங்கள் மற்றும் நிபுணத்துவத்துடன் வியாபாரங்கள் உதவிகளை வழங்க முன்வரும் போது, அவசர மனிதநேய தேவைகளை பூர்த்தி செய்ய உதவுவது மாத்திரமன்றி, பிராந்திய உறுதித் தன்மை மற்றும் மீட்சியை வலிமைப்படுத்தவும் பங்காற்றும். பாதிக்கப்பட்ட சமூகங்களில் துரிதமான, வினைத்திறனான நிவாரணம் மற்றும் நீண்ட கால மீட்சியை உறுதி செய்வதில் இது போன்ற பங்காண்மைகள் முக்கியமானதாக







அமைந்துள்ளன" என்றார்.

பேரிடரின் தீவிரத் தன்மையையும், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு கிடைப்பதற்கான அவசரத் தேவையையும் உணர்ந்து, ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ், சுகாதாரப் பணியாளர்கள் எதிர்கொள்ளக்கூடிய சவால்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த முயற்சி, பிற மனிதாபிமான நிறுவனங்களின் கூட்டு முயற்சிகளுக்கும், மியான்மார்மக்கள் பேரிடரிலிருந்து மீள்வதற்கு உதவும் முயற்சிகளுக்கும் அடிப்படை ஆதரவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த நன்கொடை தொடர்பில் ஹேமாஸ் பார்மசியுட்டிகல்ஸ் (பிரைவட்) லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி. மஹேஷா ரணசோம கருத்துத் தெரிவிக்கையில், "1948ஆம் ஆண்டு முதல், 77 வருட காலமாக தேசத்தின் மருந்துப் பொருட்கள் உற்பத்தியாளர் மற்றும் விநியோகத்தர் எனும் வகையில், தேவை எழும் சந்தர்ப்பத்தில் மருத்துவ உதவிகளை வழங்கும் பொறுப்பை நாம் கொண்டுள்ளோம். உயிர் காக்கும் அவசர உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கும் முயற்சிகளை பேணி, ஆதரவளிப்பதில் நாம் எம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ளோம். மியன்மாரில் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் பாரதூர நிலையை கவனத்தில் கொள்ளும்போது, இவ்வாறான உதவி வழங்கப்பட வேண்டிய தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, மியன்மாரில் முன்னெடுக்கப்படும் மனித நேய செயற்பாடுகளில் எமது பங்களிப்பு உதவியாக அமைந்திருக்கும் என்பதில் நாம் எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளோம்" என்றார்.

மியன்மாருக்கு தாமதமின்றி அவசர மனித நேய உதவிகளை வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில், மார்ச் 31ஆம் திகதி இடர் முகாமைத்துவ நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப கட்ட கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இடர் முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் இந்த சந்திப்பின் தலைமை வகித்ததுடன், அரச மற்றும் அரச சாரா துறைகளின் பங்காளர்கள், முப்படையினர் ஆகிய பல தரப்பினரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். அவசியமான மனிதநேய உதவிகளை பெற்றுக் கொடுக்கும் நிறுவனங்களுடன் தொடர்புகளை பேணுவது தொடர்பிலும், பூமி அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை பெற்றுக் கொடுக்கும் அவசர செயற்பாட்டு அணியை அனுப்புவது மற்றும் நிவாரண சேவைகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் பேசப்பட்டிருந்தது.

## தமிழ்

உணர்வோடு
கருவாகித் தமிழென உருவாகி
உலகத்து மொழிகளுள்
முதல் மொழி நீயாகி
உதிரத்தில் கலந்து
உயிரில் உறைந்ததால்
அன்னைக்கு நிகராய்
நீ அகிலத்தில் வாழ்கின்றாய்
பண்பாடு என்ற சொல்லின்
தாயும் நீயே
கண்களாய்க்
காக்கும் காவியமும் நீயே..!

எதுகை மோனையுடன்
அணி சந்தம் சேர- நீ
புதுமை பொங்கி
இன்னிசை ஊற்றாவாய்
தத்துவ நூல்களும்
வித்தகம் ததும்ப
விண்ணதிர் மொழியாய்
மண்ணகந்தனிலே
அழியாத புகழுடன்
ஆண்டிடும் அரசியே
ஆண்டாண்டு வாழ்க நீ
அரும் பெருஞ் செல்வமே..!

பாரதி நாவில்
புரட்சித் தீ நீ
கம்பன் நாவில்
கவிகளாய் இனித்த மொழி
வள்ளுவர் வரிகளிலும்
இரு வரிப் புரட்சி நீ
இன்றைய சந்ததிக்கும்
இனிக்கும் மொழியானாய்
நாளைய தலைமுறையும்
சுவைக்க வேண்டும் உனை
அமுதாய்..!

ஐம்பெருங் காப்பியங்கள்
உன் ஆரஞ் சூழ
பைந்தமிழ் இலக்கியங்கள்
தானென்மைக்குச் சான்றாக
இலக்கணச் சுவையும்
இனிமை சேர்க்க
தங்கரதமதில் உலகமெல்லாம்
பவனிவரும் மங்கையே
அவனியே அழிந்தாலும்
அழியாது உன்புகழ்
தரணியில் வாழ்க நீ
பல்லாண்டு பல்லாண்டு
பலகோடி நூற்றாண்டு
நீல வானின் நிறை
மை கொண்டு -நான்
உன் புகழ் பாடினாலும்
வானின் நிறந்தான் தீரக்கண்டேன்
புகழோ மேவி என் ஆயுள் தீருதடி
என் மகளும் வருவாள் உன் புகழ்
புனைய வானின் மையை
முடிக்காது வைக்கின்றேன்
அவள் வந்து தீட்டட்டும்
அரும் புகழ் அதனை
தமிழ் தமிழ் என்று
நாவாரப் போற்றட்டும்
என் மகளும்..!


குகதா

## வெய்யில் நிறச் சொற்கள்

இனி சொற்களில்
குளிர்மை அற்றுப் போகலாம்
சுட்டெரிக்கும் வெய்யிலின்
வெக்கை அதற்கும்

காரணமின்றி வருகிற
கோபத்தைக் கட்டுப்படுத்துவதற்கு
நிதானத்தை சேகரிக்க
பக்குவப்பட வேண்டும் மனசு

பொல்லாத மனசு
காலநிலை மாறினாலும்
மாறித் தொலைக்கிறது

ஆயினும்,
மூப்படையும் வயது
என்றென்றும் தொடர் வேலை
வலிகளை உணரும் உடல்
இன்னும்...
இன்னுமாய்...
நிதானத்தைக் கொல்லும்
ராட்சத விலங்குகளாய்
பல கண்முன்னே

துளியாவது
மழை வரும் சாத்தியம் பற்றி
முகில்கள் கூடிப் பேசவில்லை
இளம் தென்றல்
உடலை முத்தமிட்டுச்
செல்லவில்லை
கோடையின் குதூகலம் மட்டும்
பளிச்சென்ற வானத்துக்கு

தொண்டை வறளும் இக்கணம்
வானவில் வண்ணங்களில்
பருகும் குளிர்பான மிடறுகளால்
வெய்யில் ஒருநாளும்
குறைவடையப் போவதுமில்லை...

சொற்கள் இனி வெய்யிலின்
நிறத்தைப் பூசிக் கொள்ளும்..!


அஷ்ரபா நூர்தீன்


## பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு

மாதங்கள் பத்து
கண்ணோடு இமையென
கருவைத் தன்னோடு சுமந்தவள் - இன்று
கண்ணீரோடு நிற்கின்றாள்..!

போர்த்தி உறங்க
போர்வையும் இல்லை
கால் நடையாய் நடக்கிறாள்
காலணியும் இல்லை
கவலையோடு போகிறாள்..!

காலை சூரியன்
மேலே வந்து விடுவான் என்று
வேலை இல்லாமல் திருப்பி விடுவான்
வேலை தரும் விவசாயி..!

நேரம் போன காரணத்தால்
கருவில் சுமந்த என் மகன்
தெருவில் விட்டுப் போனதால்
வெய்யிலில் நிற்கிறேன்
வெம்பி அழுதபடி
நான் படும் வேதனையை
என் மகன் பட வேண்டாம்
என கரம் கூப்பிக் கேட்கிறாள்
கடவுளிடம்..!


தர்மலிங்கம்
நவநீதன்
திரியாய்


## தேடல்கள்...

ஏதோ ஒன்றை
எழுதிக்கொண்டு இருக்கின்றேன்
கேட்டுச் சலித்துப் போன பாடலைதான்
மீண்டும் மீண்டும்
கேட்டுக்கொண்டிருக்கிறேன்..!

ஜன்னல் வழியாய்
வானத்தை வெறித்துப்
பார்த்துக் கொண்டிருக்கின்றேன்
எப்போதோ அழுததற்கான
காரணத்தை இப்போது
தேடுகிறேன்..!

பழக்கப்பட்ட பாடலொன்றை
தனியே முணுமுணுத்துக்
கொண்டிருக்கின்றேன்
உறக்கம் மறந்த
இரவில் நட்சத்திரங்களை
கணக்கிட்டுக் கொள்கிறேன்..!

இவற்றால்தான்
ஆசுவாசப்பட்டுக் கொள்கிறேன்
இவை தான் என்னை
அமைதிப்படுத்தும்
வழி(லி) என்றால்
நம்பவா போகின்றீர்கள்..!


இ.சோபி



இத்தாலி

முதல் வாக்குப்பதிவுக்குப் பிறகு

# வெளியேறியது கரும்புகை

போப்பின் அதிகாரப்பூர்வ இல்லமான அப்போஸ்தலிக் அரண்மனையில், உள்ள சிஸ்டைன் சேப்பலில், புதன்கிழமை (7), 80 வயதுக்குட்பட்ட அனைத்து கார்டினல்களும் இரகசிய வாக்கெடுப்பில் பங்கேற்றனர்.

இந்நிலையில், புதன்கிழமை (7), நடந்த கூட்டத்தில், புதிய போப் தேர்வு செய்யப்படவில்லை. அதைக் குறிக்கும் வகையில் இரவு 9.05 மணிக்குப் புகை போக்கியில் இருந்து கரும்புகை வெளியேற்றப்பட்டது.

இந்த பணி புதிய போப் தெரிவு செய்யப்படும் வரை தொடரும்.

போப் ஆண்டவரைத் தெரிவு செய்யும் பணிகள் தொடங்கியிருக்கும் நிலையில், ஓரிரு தினங்களில் புதிய போப் ஆண்டவர் தேர்வு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான்

## பாக். வான்வெளிகளுக்கு பூட்டு



‘ஆபரேஷன் சிந்தூர்’ தாக்குதலையடுத்து, பாகிஸ்தான் தனது வான்வெளியை மூட, புதன்கிழமை (7) நள்ளிரவு முடிவு செய்தது.

அதன்படி, லாகூர் மற்றும் இஸ்லாமாபாத் விமான நிலையங்களில் உள்ள அனைத்து வணிக விமானங்களுக்கும் பாகிஸ்தான் தனது வான்வெளியை மூடியது.

இருப்பினும், கராச்சி விமான நிலையம் செயற்பாட்டில் உள்ளது.

லாகூர் மற்றும் இஸ்லாமாபாத் விமான நிலையங்களில் உள்ள அனைத்து வணிக விமானங்களுக்கும் வான்வெளி மூடப்பட்டுள்ளது என்று, பாகிஸ்தான் விமான நிலையம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான்

பாகிஸ்தான் மீது தாக்குதல்:

## உயிரிழந்தோர எண்ணிக்கை அதிகரிப்பு

பாகிஸ்தான் மீது இந்தியா நடத்திய ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 31ஆக அதிகரித்துள்ளதாக, பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த தாக்குதலில் 46 பேர் காயமடைந்து உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா நடத்திய தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




சிங்கப்பூர்

## சிங்கப்பூர் மக்களுக்கு எச்சரிக்கை

‘ஆபரேஷன் சிந்தூர்’ தாக்குதலையடுத்து, சிங்கப்பூர் வெளியுறவுத்துறை அந்நாட்டு மக்களை எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்நாட்டு வெளியுறவுத்துறை வெளியிட்ட அறிவிப்பில், “பாகிஸ்தான் மீதான இந்தியாவின் தாக்குதலினால் இந்திய, பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் நிலவி வருகிறது. இந்தியா-பாகிஸ்தான் எல்லை மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகிலுள்ள பகுதிகளுக்குப் பயணம் செய்யவேண்டாம் என அறிவுறுத்துகிறோம்.

“இந்தியா-பாகிஸ்தான் தாக்குதல் குறித்து நாங்கள் தொடர்ந்து உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம்” என தெரிவித்துள்ளது.



இந்தியா

## கண்டதும் சுட உத்தரவு


இந்தியாவின் வான்வழித் தாக்குதல்களைத் தொடர்ந்து, மேற்கு எல்லையில் தற்போது பாதுகாப்பு கணிசமாகப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி ராஜஸ்தான், பாகிஸ்தானுடனான தனது எல்லையை முழுமையாக மூடியுள்ளது.

இந்நிலையில், சர்வதேச எல்லைக்கு அருகில் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாட்டம் இருந்தால் கண்டதும் சுட எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு (BSF) உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள், எதிரிகளிடம் இருந்து எந்தவொரு பதிலடி அல்லது எல்லை தாண்டிய ஊடுருவல் முயற்சிகளையும் தடுக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக ராஜஸ்தான் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறுகையில், “எல்லைக்கு அருகில் கண்டறியப்பட்ட



எந்தவொரு சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைக்கும் எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க BSF பணியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நிலைமை பதட்டமாக உள்ளது, ஆனால், கட்டுப்பாட்டில் உள்ளது” என்று கூறினார்.

பாகிஸ்தான் - ராஜஸ்தான் எல்லை முழுவதும் சீல் வைக்கப்பட்ட நிலையில் அதனை ஒட்டிய பகுதிகளிலிருந்த மக்கள் வெளியேறி வருகின்றனர்.

பயங்கரவாத முகாம்களை இந்தியா தாக்கி அழித்ததற்குப் பாகிஸ்தான் பதில் தாக்குதல் நடத்தலாம் என்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அப்பகுதியில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.



சம்பியன்ஸ் லீக்:

# வெளியேற்றப்பட்ட ஆர்சனல்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் வெளியேற்றப்பட்டுள்ளது.

பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜேர்மைனுடனான அரையிறுதிப் போட்டியில் தோற்றே தொடரிலிருந்து ஆர்சனல் வெளியேற்றப்பட்டுள்ளது.

தமது மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பின்தங்கியிருந்த ஆர்சனல், பரிஸ் ஸா ஜேர்மைனின் மைதானத்தில் வியாழக்கிழமை(08) நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து 1-3 என்ற மொத்த கோல் கணக்கில் தோற்று தொடரிலிருந்து வெளியேறியது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை புகாயோ ஸாகா பெற்றதோடு, பரிஸ் ஸா ஜேர்மைன் சார்பாக பேபியன் ருய்ஸ், அஷ்ரஃப் ஹகிமி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## ஐ.பி.எல்லில் இருந்து படிக்கல் விலகல்



இந்தியன் பிறீமியர் லீக்கிலிருந்து (ஐ.பி.எல்) கெண்டைக்கால் பின்தசைக் காயம் காரணமாக றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவின் தேவ்டுட் படிக்கல் விலகியுள்ளார்.

இந்நிலையில், படிக்கல்லை மாயங்க் அகர்வால் மூலம் றோயல் சலஞ்சர்ஸ் பிரதியிட்டுள்ளது.

இடதுகை துடுப்பாட்டவீரரான படிக்கல் 100 பந்துகளில் 150.60 என்ற வேகத்தில் 247 ஓட்டங்களை இப்பருவகாலத்தில் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



ப்றூக்கைப் பிரதியிட்ட அட்டல்

## ஐ.பி.எல்: டெல்லி கப்பிட்டல்ஸில்

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்.) டெல்லி கப்பிட்டல்ஸ் அணியானது ஆப்கானிஸ்தான் துடுப்பாட்டவீரரான செதிகுல்லாஹ் அட்டல்லைக் கைச்சாத்திட்டுள்ளது.

ஐ.பி.எல்லிருந்து விலகிய இங்கிலாந்தின் ஹரி ப்றூக்கையே அட்டல் பிரதியிட்டுள்ளார்.

# டெஸ்ட்களில் இருந்து ஓய்வு பெற்ற றோஹித்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து இந்திய அணித்தலைவர் றோஹித் ஷர்மா ஓய்வு பெற்றுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியின் தலைவர் பதவியிலிருந்து 38 வயதான றோஹித் நீக்கப்படுவாரென்ற தகவல்களுக்கு மத்தியிலேயே அவரின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

எவ்வாறெனினும் தொடர்ந்து ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் றோஹித் விளையாடவுள்ளார்.

இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து 2024ஆம் ஆண்டு இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து றோஹித் ஓய்வு பெற்றிருந்தார்.

இதுவரையில் 67 டெஸ்ட்களில் விளையாடி 40.57 என்ற சராசரியில் 4,301 ஓட்டங்களை றோஹித் பெற்றிருந்தார். றோஹித்தின் கீழ் 12 போட்டிகளில் வென்ற இந்தியா, மூன்றை வெற்றி தோல்வியின்றி



முடித்திருந்தது.

அண்மையில் இடம்பெற்ற பங்களாதேஷ், நியூசிலாந்து, அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடர்களின்போது றோஹித் பிரகாசித்திருக்கவில்லை என்பதோடு இந்தியாவும் தோல்வியைத் தளுவியது.

இந்நிலையில் அவுஸ்திரேலியத் தொடரின்போது றோஹித் இல்லாத சமயத்தில் ஜஸ்பிரிட் பும்ராவே அணித்தலைவராகக் கடமையாற்றியபோதும் அவரது பந்துவீச்சு சுமை காரணமாக ஷுப்மன் கில்லே அணித்தலைவராக நியமிக்கப்படுவாரெனத் தெரிகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 09, மே 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.